கருத்தரங்கக் கட்டுரைகள்

# தமிழ் இலக்கியங்களில் பண்பாடு குறித்த பதிவுகள்

தொகுப்பாசிரியர்

**முனைவர் வெ.முத்துலட்சுமி**

தமிழ்த்துறைத் தலைவர்,

ஜி.டி.என். கலைக் கல்லூரி, திண்டுக்கல்.




பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வுமையத்தின் நிதி நல்கையுடன் நடைபெறும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

# தமிழ் இலக்கியங்களில் பண்பாடு குறித்த பதிவுகள்

**கருத்தரங்கக் கட்டுரைகள்**

தொகுப்பாசிரியர்

முனைவர் **வெ.முத்துலட்சுமி**

தமிழ்த்துறைத் தலைவர்,

**ஜி.டி.என். கலைக் கல்லூரி (தன்னாட்சி)**

தேசிய தர மறுமதிப்பீட்டுக்குழுவினரால் `B' தரச்சான்று பெற்ற கல்லூரி

திண்டுக்கல் - 05.

பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வுமையத்தின் நிதி உதவியுடனும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் ஜி.டி.என். கலைக்கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை இணைந்து நடத்தும்

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

## நூற்குறிப்பு...

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் பண்பாடு குறித்த பதிவுகள் |
| ஆசிரியர் | : | முனைவர் வெ.முத்துலட்சுமி |
| முதற்பதிப்பு | : | 2020 |
| உரிமை | : | பதிப்பகத்திற்கே |
| பக்கம் | : | 648 |
| பொருள் | : | கட்டுரைகள் |
| விலை | : | ரூ.600.00 |
| தட்டச்சு | : | ஜெ.ஜெ.டிசைன்ஸ், திருச்சி. 9952034876 |
| அச்சிட்டோர் | : | மீரா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-5. |

TAMIL ILAKIYANKALIL PANPADU KURITHA PATHIVUKAL

| | | |
|---|---|---|
| By | : | Dr. V.Muthulakshmi |
| Published on | : | 2020 |
| CopyRights © | : | MJ PUBLICATION HOUSE |
| Pages | : | 648 |
| Subject | : | Non Fiction |
| Price | : | Rs.600.00 |
| Typeset by | : | JJ Designs, Trichy. 99520 34876 |
| Printed @ | : | Meera Offset Printers, Chennai-5. |
| ISBN | : | 978-93-937269-3-8 |
| Book ID | : | MJPH 10125 |
| QR | : | |

MJ PUBLICATION HOUSE

#9, Saint John Church Complex, Rockins Road, Trichy - 1.
Ph : 99434 28994, 0431 4038 994. mjpublications2018@gmail.com.
@mjpublication @facebook.com/mjpublicationhouse

| | | | |
|---|---|---|---|
| 50. | நடுநாட்டு மக்களின் பண்பாட்டுக் கூறுகள் | முனைவர். அ.சேமலா வசந்தா | 309 |
| 51. | தமிழ் இலக்கியங்களில் பண்பாடு குறித்த பதிவுகள் | இ.சௌந்தர்யா | 316 |
| 52. | திணைமாலை நூற்றைம்பதில் தமிழர் பண்பாடு | முனைவர் மு.ஞான ஆஸ்லின் | 323 |
| 53. | குறுந்தொகை காட்டும் தமிழர் பண்பாடு | முனைவர் த. தமிழ்ச் செல்வன் | 332 |
| 54. | ஐந்திணை ஐம்பதில் மக்களின் பழக்கவழக்கங்கள் | அ. திலிப் ஏங்கல்ஸ் | 337 |
| 55. | சூழலியல் நோக்கில் முல்லைத்திணையில் பண்பாடு | மு. துர்கா | 342 |
| 56. | தமிழ் நாவல்களில் நாட்டுப்புறவியல் பண்பாடுகள் | முனைவர். எஸ்.துரைமுருகன் | 348 |
| 57. | ஆன்மீக இதழ்களில் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள் | க.நிர்மலாதேவி | 357 |
| 58. | பூமணி கதைகளில் பண்பாட்டு அமைப்பு | முனைவர். பி.பகவதி | 360 |
| 59. | இலக்கியங்களில் ஆற்றுப்படை | வெ.பத்மாவதி | 366 |
| 60. | திருக்குறள் உணர்த்தும் இல்லறப் பண்பாடு | முனைவர் ஆ.த. பரந்தாமன் | 372 |
| 61. | தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள் | முனைவர் ம.பாபு | 379 |
| 62. | சிலப்பதிகாரம் உணர்த்தும் நன்னெறிகள் | முனைவர் சி.பாலமுருகன் | 387 |
| 63. | திருக்குறளில் பேச்சுக்கலை | பேரா. ரா.சே. பாலாஜி | 394 |
| 64. | பண்பாட்டுக் கூற்றில் காலத்தின் வழியே முருக வழிபாடு | த.பரமேஸ்வரன் | 403 |
| 65. | தமிழ் நதியின் புனைவுகளில் வாழ்வியல் மாண்புகள் | ம.புனிதா | 409 |
| 66. | தமிழ் இலக்கியத்தில் குழந்தை வளர்ப்பு | முனைவர் கௌ.பெருமாள் | 414 |
| 67. | பெரியபுராணத்தில் பண்பாட்டுப் பதிவுகள் | க.மகாலெட்சுமி | 422 |
| 68. | புறநானூறு கட்டும் கைம்பெண்களின் பண்பாடு | முனைவர் ஆ. மகாலட்சுமி | 428 |
| 69. | புறநானூற்றில் புலவர் பண்பு | திருமதி.ப.மாக்கில்மா | 433 |
| 70. | நா. முத்துக்குமார் கவிதைகளில் பண்பாட்டு சிதைவுகளின் வெளிப்பாடு | ப.கு. மகேஸ்வரி | 438 |
| 71. | தேவாரத்தில் பண்பாட்டு மரபுகள் | முனைவர் சே.மகேஸ்வரி | 445 |
| 72. | சங்ககால தமிழர் பண்பாடு | முனைவர் ப.மணிகண்டன் | 452 |
| 73. | குறுந்தொகையில் பண்பாட்டு பதிவுகள் | முனைவர் தி.மணிமொழி | 460 |
| 74. | உவரி வாழ் பரதவர்களின் பண்பாட்டுக் கூறுகள் | மு.மணிமேகலா | 466 |
| 75. | புலவர் புராணத்தில் சமய நல்லிணக்கம் | வே.முத்தமிழ் | 474 |
| 76. | சங்க இலக்கியங்களில் இயற்கைக் காட்சிகள் | முனைவர் வெ.முத்துலட்சுமி | 480 |

# 68. புறநானூறு சுட்டும் கைம்பெண்களின் பண்பாடு

முனைவர் ஆ. மகாலட்சுமி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

சங்கப்பெண்டிர் கொண்டிருந்த கற்புக் குணங்களுள் நாணமும் பயிர்ப்பும் பண்பாட்டுக் குணங்களாகும். கணவன் பெயர் சொல்லமை, அவன் சொல்லை தட்டாமை, அவன் குற்றத்தை மறைந்தல், பின்னுண்டல், பின் தூங்கி முன்னெழுதல், விருந்து மிக வரினும் சலியாமை, கணவனில்லாக் காலத்துத் தன்னை அணி செய்யாமை, அவன் இறப்பில் உடன்கட்டையேறல், அவனுக்குப்பின் உயிர் வாழ நேரின் மறுமணம் செய்யாமை ஆகியவை கற்புடை மகளிருக்கு பண்பாட்டுக் குணங்களாகும். அவ்வகையில் புறநானூற்றில் கைம்மை பெண்களில் பண்பாட்டை கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலத்தில் கணவனை இழந்த மகளிர் கைம்மை மகளிர் எனப்படுவர். இத்தகையோரை இன்று விதவை என்று அழைக்கின்றோம். புறநானூற்றில் இவர்களது நிலையை 'கழிகல மகளிர்', 'உயவற் பெண்டிர்', 'பருத்திப் பெண்டிர்' என பலவாறாகச் சுட்டப்பட்டுள்ளனர். தொல்காப்பியர் நிலையாமையை வலியுறுத்தும் காஞ்சித்திணை துறையில் மனைவியை இழந்த கணவன் நிலையை தபுதார நிலை என்றும் கணவனை இழந்த மனைவியின் நிலையை தாபத நிலை என்றும் சுட்டுகின்றார்.

## காதலி இழந்த தபுதார நிலையும்

காதல னிழந்த தாபத நிலையும் (தொல் - பொருள்- நூ - 77) என்பது தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் இவ்விரு நிலைகள் குறிக்கப்பட்டிருப்பினும் சங்க இலக்கியத்தில் கணவனை இழந்த கைம்பெண் நிலையே பேசப்பட்டுள்ளது. கணவனை இழந்து துயரம் தாங்காது பிரிவுத் துயரால் கணவனோடு உடன் இறக்க வேண்டும், அல்லது கைம்மை நோற்று வாழ வேண்டும் என விரும்பிய நிலையினையே கைம்மை மகளிரின் நிலை உணர்த்துகின்றது.

## மூவகை மகளிர்

கைம்மை மகளிரின் மூன்று நிலைகளில் விளக்கப்பட்டுள்ளன. அக்கைம்மை மகளிரின் செயல் அடிப்படையில் தலை, இடை, கடை கருதுவர். கணவன் இறந்த செய்தி கேட்டு உயிர் விடுதல் தலைக்கும் இடை என்பது கணவனுடன் தானும் உயிர் மடிதலும்; கணவனோடு உயிர் திறக்காது கைம்மை நோன்பு நோற்று வாழ்வது என்பனவாகும்;.

அஃறிணை உயிரினமான மந்தியை குறித்து கடுந்தோட் கரவீரன் என்னும் புலவர் கூறும்போது,

"கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்"

(குறுந்தொகை- 69: 2-4)

தன் குட்டியை இனத்தோடு சேர்த்துவிட்டு பின்பு தானும் உயிர் மாய்த்துக்கொண்ட மந்தியின் நிலையை குறுந்தொகை கூறுகிறது.

தன் கணவன் கள்வன் அல்லன் என்று மக்களுக்கு தெரிவாகிய பின்னர் இறந்த கண்ணகியின் நிலை சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் பொழுது மகளிர் தன் கணவனோடு உடன் இருக்காது கடமை கருதியே வாழ்ந்து வந்தனர் என்பது பெறப்படுகிறது. அதனால் நோன்பு நோற்று வாழும் 'கடமை மகளிர்' என்று கூறும் டாக்டர் வா.சுப.மாணிக்கம் கருத்தும் இதற்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது.

கணவனை இழந்த பெண்டிர் தங்களை ஒப்பனை செய்து கொள்ளாமலும் கூந்தலை கொய்து கொள்ளுதலும் ஆகிய வழக்கத்தை கணவற்கென வாழ்ந்த மகளிர் பிற ஆடவர்க்குத் தம் அழகு விளங்கித் தோன்ற விரும்பாத காரணத்தால் உண்டான பழக்கமாகலாம் என்று மா.இராசமாணிக்கனார் கூறியுள்ளார்.

வேள் எவ்வி இழந்த பின்னர் அவனது மனைவி வீட்டை மெழுகி தர்ப்பைப்புல் மேல் படைத்து தானும் உணவருந்தியதை,

"பிடி அடி அன்ன சிறு வழி மெழுகி,
தன் அமர் காதலி புல் மேல் வைத்த
இன் சிறு பிண்டம் யாங்கு உண்டனன்கொல்"

(புறநானூறு- 234:2-4)

எடுத்துரைத்துள்ளது.

## கூந்தலை கொய்தல்

கைம்பெண்கள் கருமணலையொத்தும் மெல்லிய குவிந்ததுமான கூந்தலை குறைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்தது.

"ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர,
அவிர் அறல் கடுக்கும் அம் மென்
குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே"

(புறநானூறு- 25:12-14)

புறநானூறு கட்டியுள்ளது தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறி தன்னை எதிர்த்த இரு வேந்தர்களோடு போரிட்டு அவர்களைக் கொன்று அக்கால போர் மரபுப்படி அவர்களுடைய முரசுகளையும் கவர்ந்து கொண்டான். அந்நிலையில் அவனைப் பல வீரர்கள் சூழ்ந்துகொண்டனர். எனினும் வேற்படையால் அவர்களைக் கொல்ல அவன் மனம் இடந்தரவில்லை. ஏனெனில் போரில் இறந்த வேந்தர்களின் மகளிர் பெரும் துயரத்தால் தன் மார்புகளில் அடித்துக்கொண்டு கதறி அழுத வண்ணம் கரிய அழகிய கூந்தலை கொய்தல் கண்டு அவன் உள்ளம் பெரிதும் இறங்கிற்று. இவ்வாறு கல்லாடனார் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனின் வெற்றி சிறப்பை பாடுகிறார். எனினும் கணவனை இழந்த மகளிர் தம் கூந்தலை கொய்யர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது

"வளையல் அணியாமை
வளையல்களை கையில் அணியாமலும்
ஊழின் உருப்ப எருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளை முறி சிதற" (புறநானூறு- 237:10-11)

முறையாக அறைந்து அழும் மகளிர் தம் வளைகள் வாழைப்பூப் போல சிதறி விழுந்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அல்லி அரிசியால் ஆன உணவு

அல்லி அரிசியால் ஆன உணவை உண்டு வாழ்ந்து வந்தனர். இதனை,

"சிறு வெள் ஆம்பல் அல்லி உண்ணும்
கழி கல மகளிர் போல" (புறநானூறு - 280:13-14)

முடிகளைந்த தலையைக் கழுவுதலினின்றும் தெளிந்த நீர் வடிய தம் இளமைக் காலத்து அழகிய மாறுபட்ட தழை மாலையாக விளங்கிய சிறிய வெள்ளிய ஆம்பலிடத்து உண்டாகும் அல்லி அரிசியை உண்ணும் அணிகலன் களைந்த கைம்பெண்கள்

வாழ்ந்திருந்தனர் என்பதை அறியலாம். இதில் வரும் கழிகல மகளிர் என்னும் தொடர்; கைம்பெண்கள் கொடியை மட்டுமன்றி எல்லா அணிகலன்களையும் நீக்கி விடுவதை மரபாகக் கொண்டிருந்தனர் என்பதை சுட்டுகின்றன. மேலும் அக்கைம்மைப்பெண் வேளைப்பூவை உணவாகக் கொண்டனர் அவர்கள் பாய் கூட இல்லாமல் பருக்கைகளாலான படுக்கையில் படுத்து உறங்கினார் என்பது அறியப்படுகின்றது.

### பச்சிலை உணவு

சேரன் குடக்கோ நெடுஞ்சேரலாதன் சோழன் பேர் படைகை பெருவிரலையும் கிள்ளியும் ஒருவரை ஒருவர் எதிர்த்த பொழுது இருவரும் இறந்துவிட்டனர். அவர்கள் இருவரும் இறந்தும் போர் ஓய்ந்தது. அவர்களுடைய பெண்டிர் பச்சை இலையைத்தின்னாமாலும் குளிர்ந்த நீரில் மூழ்காமலும் இறந்துபட்ட மன்னரின் மார்பை தழுவி உயிர்நீத்தவராய் களத்தில் கிடந்தனர். இதனை,

"பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே"

(புறநானூறு - 62:13-15)

என்று கழாத்தலையார் பாடல் கூறுகின்றது. கணவனை இழந்தப் பெண்கள் பச்சிலையை தின்பதும் குளிர்ந்த நீரில் மூழ்குவது மகளிர் வழக்கம் என்பது புறப்பாடல்களில் இருந்து தெரிகின்றது.

### ஆம்பல் உணவு

தான் இளமையாய் இன்பமுடன் இருந்தபோது அணிதற்குரிய தழையாடையாகப் பயன்பட்ட ஆம்பல், தன் கணவனை இழந்து நிற்கும் தற்போதைய துன்பநிலையில் அல்லியிடத்து உண்டான புல்லரிசியைத் தந்து உண்ணும் உணவாக அமைகின்றது என்று

"இன்னா வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல் ஆயினவே"

(புறநானூறு - 248:4-5)

தலைவனை இழந்த ஒருத்தி கூறுவதாக ஒக்கூர் மாசாத்தியார் என்ற புலவர் பாடுகிறார். மகளிர் ஆம்பலின் புல்லரிசியை உணவாக கொள்வர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

### தீப்பாய்ந்து இறத்தல்

கோப்பெரும் பெண்டு தன் கணவன் பூதப்பாண்டியன் இறந்து பட்டதால் ஆற்றொணாத் துயரமும் தீயில் பாய்ந்து

உயிரிழக்க முற்பட்ட பொழுது அவளை சான்றோர்கள் தடுத்தனர். அப்போது அவள் அவர்களை நோக்கி பல்லாற்றானும் அறிவு நிறைந்தவர்கள் உன் தலைவனோடு நீயும் இருப்பாயாக என்று கூறாமல் இருப்பாயாக என்று கூறாமல் அதனை தவிர்க்க என்று கூறும் சான்றோர்களே கையால் குளிர்ந்த நீர் சோற்றுடன் புளியுடன் வேகவைத்த வேளை இலையை உணவாக கொண்டு படுக்கையில் கண் பாயும் இன்றி கைம்மை நோன்பால் வருந்தும் பெண் நான் அல்லள். புறங்காட்டில் விரலால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாகலாம். என் கொழுநன் இறந்தபின் மலர்ந்த தாமரையையுடைய நீர் நிறைந்த பொய்கையும் தீயும் எனக்கு ஒரு தன்மையாகும் என்றுரைத்தாள். இதை,

"அரும்பு அற
வள் இதழ் அவிழ்ந்த தாமரை"

நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே! (புறநானூறு - 246:13-15) கணவனை இழந்த மனைவி தீப்பாய்வதனைப் புறநானூற்றில் விளக்கப்பட்டுள்ளது. தன் இல்லத்தை அடைந்தவர்களுக்கு சுவையான உணவளித்து அவர்களுடைய துன்பத்தைப் போக்கிய தலைவன் இறந்துவிட்டபின் அவனுடைய மனைவி தன் கூந்தலைக் கொய்தும் வளையலை களைந்தும் அல்லி அரிசியை உணவை உண்ணும் தீப்பாய்ந்தும் துன்பநிலையை அடைந்தனர். எனவே பெரும்பாலும் பெரும்பாலும் சங்க காலத்தில் சங்ககாலத்தில் கடுமையான நோன்பு மேற்கொள்வது கணவனை இழந்த மகளிரின் பண்பாடாக இருந்தது எனக்கொள்ளலாம். கணவனை இழந்தவர் மறுமணம் செய்து கொள்ளாமல் தம் உடலை வருத்தும் நோய் மேற்கொண்டதும் மனைவியர் தம் கணவர் பால் கொண்டிருந்த ஆழமான அன்பையும் கணவனையே வாழ்க்கையின் உயிராக மதித்து இருந்த தன்மையையும் தெளிவாகின்றன. கணவனை இழந்த பெண்டிர் யாருடைய வற்புறுத்தலும் இன்றி தாமே கைம்மை நோன்பை நோற்றனர் என்பது புறநானூற்றுப் பாடல்கள்; நன்கு விளக்குகின்றன.

## பயன்பட்ட நூல்கள்


1. புறநானூறு, 2. குறுந்தொகை
3. புறநானூற்றில் தமிழர் பண்பாடு - செ.பழனிச்சாமி
4. பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் -தேவநேயப் பாவாணர்
5. தொல்காப்பியம்.


★